Thalaivaasal

# தலைவாசல்

Thalaivaasal

எங்கள் பாரம்பரியம்

வீடு 01 வாசல் 25 | thalaivaasaltv@gmail.com | வெள்ளிக்கிழமை ஒக்ரோபர் 23, 2020


## பேருந்தை வழிமறித்து கம்பஹாவிலிருந்து யாழ். வந்த ஆறுபேருக்கு வலைவீச்சு

நேற்று இரவு கம்பஹா மாவட்டம் சீதுவையிலிருந்து யாழ்ப்பாணம் வந்த ஆறு பேர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த அரச பேருந்து கம்பஹா மாவட்டம் சீதுவைப் பகுதியில் வழிமறிக்கப்பட்டு ஆறு பேர் ஏற்றப்பட்டிருக்கின்றனர்.

அவர்கள் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த நிலையில் பேருந்து சாரதி மற்றும் நடத்துனர் தமது டிப்போவின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில் அவர்கள் இருவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பேருந்தில் வந்த ஆறு பேர் மற்றும்

03

## கொழும்பில் கொரோனா தொற்றுப்பரவிய இடங்கள்



நேற்று (22) அடையாளம் காணப்பட்ட 147 கொரோனா தொற்றாளர்களும் கொழும்பு பகுதியில் வசிப்பவர்கள் என கொரோனா வைரஸ் (கொவிட் 19) பரவலை கட்டுப்படுத்தும் தேசிய மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

நேற்று மொத்தமாக 309 பேர் கொவிட் - 19 தொற்றுக்குள்ளான நிலையில் அவர்களில் 188 பேர் பெலியகொட மீன் விற்பனை மத்திய

03




## யாழ். மாநகரசபை உறுப்பினர் பதவியிலிருந்து மயூரனை நீக்க இடைக்கால தடை

யாழ். மாநகரசபை உறுப்பினர் மகேந்திரன் மயூரனை மாநகரசபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் தீர்மானத்திற்கு யாழ். மாவட்ட நீதிமன்றம் இடைக்கால தடை விதித்துள்ளது.

எதிர்வரும் நவம்பர் 6 ஆம் திகதி பிரதிவாதிகளான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ/ன் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் மன்றில் முன்னிலையாக


03

## யாழில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மூவருக்கு கொரோனா

யாழ். கொரோனா ஆய்வுகூட பரிசோதனைகளின் அடிப்படையில் இன்று மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆர். கேதீஸ்வர் தெரிவித்துள்ளார்.

03

## ஓரே நாளில் 609 பேருக்கு கொரேனா



இலங்கையில் இன்று கொரோனா தொற்றுக்குள்ளான 609 பேர் அடையாளங்காணப்பட்டதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பேலியகொடை மீன் சந்தையை சேர்ந்த 496 பேருக்கும், காலி மீன்பிடி துறைமுகத்தை சேர்ந்த 25 பேருக்கும்,

03

## மட்டு மேய்ச்சல் தரை விவகாரம்

## அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் அவசர கலந்துரையாடல்



கொழும்பு பத்தரமுல்ல மகாவலி அபிவிருத்தி அமைச்சில் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் உள்ளகப் பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தலைமையில் மகாவலி காணி தொடர்பாக இன்று கலந்துரையாடப்பட்டது.

03

## வாக்காளர்களாக பதியுங்கள்! காலக்கெடுவைத் தவறவிட வேண்டாம்!



வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கான இந்தக் காலக்கெடுவை, எவரும் தவறவிட்டுவிட வேண்டாம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தல்கள் ஆணையத்தால் 2020 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பைத் தயாரிக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இதன் முதற்கட்டமாக கிராம சேவையாளர்களின் ஊடாக ஆட்களைக் கணக்கெடுக்கும் படிவங்கள் விநியோகிக்கப்பட்டுப் பதிவுகள் பெறப்பட்டுள்ளன. எனினும் படிவங்களைப் பூர்த்தி செய்து கையளிக்காதவர்கள் இன்னும் இருப்பதால் இம்மாதம் 29ஆம் திகதி வரையில் அவர்களுக்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக யாழ் - மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் அறியத்தந்துள்ளது.

இந்நிலையில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கான இந்தக் காலக்கெடுவை, எவரும் தவறவிட்டுவிட வேண்டாம் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேருநர் இடாப்பில் பெயர்கள் பதியப்பட வேண்டிய அவசியம் குறித்துத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் வெளியிட்

03

## நாடாளுமன்ற உறுப்பினர்களின் துரோகம்

# அதிக வலியை தருகின்றது



எமது நாட்டின் தலையெழுத்தை மாற்றி, இருண்ட யுகத்துக்குள் தள்ளியுள்ள 20 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டதை விடவும், அந்தத் திருத்தம் மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தோடு நிறைவேற, மக்களின் முதுகில் குத்தி கட்சி தாவிய எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்த துரோகமே அதிகமாக வலியைத் தருகின்றது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்துள்ளார்.

20 ஆவது திருத்தம் தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, "ஒக்ரோபர் 22 இலங்கையின் வரலாற்றில் ஒரு கறுப்பு நாளாக மாறியுள்ளது. தனிப்பட்ட ஒருவரின் கைகளில் ஒட்டுமொத்த அதிகாரங்களையும் கொடுத்து, ஜனநாயக ரீதியில் ஒரு சர்வாதிகாரியை உருவாக்கும் 20 ஆவது திருத்தம் நாடாளுமன்றில் 91 மேலதிக வாக்குகளால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நேற்று நிறைவேறியுள்ளது.

ஜனநாயகத்தின் பேரைப் பயன்படுத்தி சர்வாதிகாரத்தை நிலைநிறுத்தும் ராஜபக்சக்களின் சதியை திட்டமிட்டபடி நிறைவேற்றியுள்ளனர். இதன் விளைவை ஒட்டுமொத்த இலங்கையர்களும், எதிர்காலம் முழுதும் அனுபவிக்க வேண்டிய துயரமான, இருண்ட யுகம் தோன்றியுள்ளது.

இந்தத் திருத்தம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையோடு நிறைவேற, எதிர்க்கட்சி வரிசையில் இருந்து முதுகில் குத்தி விட்டு கட்சி தாவிய எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களே முக்கியமான காரணம்.

அவர்களில் 6 பேர் முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள். இவர்களுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் அரவிந்தகுமார் மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் டயானா ஆகிய எட்டுப்பேரே இந்தத் துரோகத்தைப் புரிந்து நாட்டில் சர்வாதிகார ஆட்சி மலர துணைபோயுள்ளனர்.

20 ஆவது திருத்தம் நிறைவேறிவிட்டதே என்ற துயரை விடவும், இந்த எட்டுப் பேரும் செய்த துரோகமே இன்னும் அதிக வலியை மக்களிடம் உண்டாக்கியுள்ளது.


கடந்த ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதிக்குப் பின்னர் முஸ்லிம் மக்களை ஈவிரக்கம் இல்லாமல், ஐந்தறிவு ஜந்துக்கள் போல நடத்துவதற்கும், கலவரங்களைத் தூண்டி விட்டு இழப்புக்களை ஏற்படுத்துவதற்கும் சூத்திரதாரிகளான ராஜபக்சக்களுக்கு, அதே முஸ்லிம் இனத்தின் பிரதிநிதிகள் தோள் கொடுக்க எப்படி முடிந்தது?

அவ்வளவு எளிதில் தங்கள் இனத்துக்கு ராஜபக்சக்கள் இழைத்த கொடுமைகளை மறந்துவிட்டு, சுயநலத்துக்காக ஓடிப்போய் ஒட்டிக்கொள்ளபவர்களை முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகள் என அழைக்கமுடியுமா? அதேபோன்று தான் அரவிந்தகுமாரும், 20 ஆம் திருத்தத்துக்காக ராஜபக்சக்களுக்கு அடிமையானதன் மூலம் தனக்கு வாக்களித்த மலையக மக்களுக்கு துரோகமிழைத்துள்ளார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு இன்னமும் 1000 ரூபா சம்பளத்தை கொடுக்க மனமில்லாமல் நாடகமாடும் அரசுக்கு ஆதரவு தெரிவித்ததம் மூலம் தன் மீது பெரும் களங்கத்தை உண்டு பண்ணியுள்ளார்.

இலங்கையின் எதிர்காலத்தைப் படுகுழிக்குள் தள்ளியுள்ள 20 ஆம் திருத்தத்தை நிறைவேற்ற துணைபோனதன் மூலம் இந்த எட்டுப் பேரும் செய்த துரோகத்தை மக்கள் மன்னித்தாலும், வரலாறும், காலமும் அவர்களை மன்னிக்கப் போவதில்லை" என குறிப்பிடப்பட்டுள்ளது.

## முஸ்லிம் எம்.பி.கள் முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமல்லாமல் வரலாற்று துரோகம் செய்துவிட்டனர்



இருபதாம் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமல்லாமல் முழு இலங்கையருக்கும் வரலாற்று துரோகம் இழைத்துள்ளனர் என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் குற்றம்சுமத்தியுள்ளார்.

இருபதாம் திருத்த சட்டம் நிறைவேற்றப்பட்ட பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர்,


"முஸ்லிம்கள் "தொப்பி பிரட்டிகள்" என்று பெரும்பான்மை சமூகத்தினர் எம்மை அடிக்கடி விமர்சிப்பார்கள். இவர்கள் இவ்வாறு விமர்சிப்பதை இன்று இந்த முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உண்மை என நிருபித்துள்ளனர். இன்று இவர்கள் செய்தது முஸ்லிம் சமூகத்துக்கு மட்டுமல்லாமல் முழு இலங்கையருக்கும் வரலாற்று துரோகம். இவர்கள் ஆதரவு அளித்ததால்தான் இன்று இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதில் 18 ஆம் 19 ஆம் 20 ஆம் திருத்த சட்டம் என மூன்றுக்கும் அதரவாக வாக்களித்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர்.

இவர்களின் தேர்தல் பிரச்சாரங்களை எடுத்து பார்த்தால் முழுவதும் இனவாதம் பேசியே வாக்கு சேகரித்தனர். இந்த அரசு ஆட்சிக்கு வந்தால் இலங்கை மியன்மாரை போன்று மாறும் என கூறினர். இன்று எந்த முகத்தை கொண்டு மீண்டும் மக்கள் முன் செல்வர்.

இவர்கள் இந்த அரசுக்கு வழங்கிய இந்த அதிகாரம் மூலம் விசேடமாக கிழக்கில் தொல்பொருள் செயலணி போன்று பல வழிகளில் பறிபோகவுள்ள எமது காணிகளுக்கும் சிங்கள குடியேற்றங்களுக்கும் எமது உரிமைகளுக்கும் என்ன தீர்வை வழங்கப்போகிறார்கள்.

இன்னும் ஒரிரு தினங்களில் ஊடகங்கள் முன்வந்து எமது மாவட்ட அபிவிருத்திக்காக ஆதரவாக வாக்களித்தோம் என கூறுவார்கள். " என தெரிவித்தார்.




## முற்போக்கு முன்னணியிலிருந்து அரவிந்தகுமார் எம்.பி. இடைநிறுத்தம்!

தமிழ் முற்போக்கு முன்னணியிலிருந்து பாராளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தமிழ் முற்போக்கு முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

தமிழ் முற்போக்கு கூட்டணியின் பாராளுமன்ற குழு, அரவிந்த் குமார் எம்பியை, கூட்டணியிலிருந்து இடைநிறுத்தம் செய்த எனது முடிவை ஏகமனதாக ஏற்றுக் கொண்டு உறுதிப்படுத்தியது. அவரது கூட்டணி அங்கத்துவத்தை முழுமையாக நீக்கும் முடிவை அரசியல் குழுவும், சட்ட நடவடிக்கையை கூட்டணி பங்காளி கட்சி மலையக மக்கள் முன்னணியும் எடுக்கும். இதற்கு அவசியமான அனைத்து ஒத்துழைப்புகளையும் பங்காளி கட்சிகள் வழங்கும்.

இன்றைய கூட்டத்தில், கூட்டணியின் பிரதி தலைவர்கள் எம்பிக்கள் திகாம்பரம், ராதாகிருஷ்ணன், வேலுகுமார், உதயகுமார் மற்றும் பொதுசெயலாளர் சத்திரா சாப்டர் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

## ஜனாதிபதியிடம் பாராளுமன்றம் மண்டியிட்டுவிட்டது



20 ஆவது திருத்தச் சட்டத்தால் ஜனாதிபதியிடம் பாராளுமன்றம் மண்டியிட்டுள் ளது. அத்துடன், நாடு சர்வாதிகார திசையை நோக்கியே நகரும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற அரசமைப்பின் 20ஆவது திருத்தச்சட்டத்தின் இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற் றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

நிறைவேற்று அதிகாரத்தின் மூலம் ஏற்படும் பாதகங்கள் பற்றி கடந்த காலத்தில் அனைத்து தேர்தல்களிலும் வேட்பாளர்கள் பேசினர். அதனை அடிப்படையாக கொண்டுதான் மக்கள் ஆணையை பெற்றுக்கொண்டார்கள்.

19ஆவது திருத்தத்தில் சர்வாதிகார போக்குடைய ஜனாதிபதி முறையை ஓரளவு குறைத்தோம். மீண்டும் அதற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. ஒரு தனிநபரிடம் அதிகாரங்களை குவிக்காது பாராளுமன்றத்தில் மக்கள் பிரதிநிதிகளிடம் அதிகாரத்தை கொடுக்கும் சூழல் உருவாக்கப்பட்டதை மக்கள் ஏற்றுக்கொண்டிருந்தார்.

தேர்தல்களில் எந்தக் கட்சிக்கு வாக்களித்தாலும் ஜனநாயகம் வலுப்படுத்தப்பட வேண்டும் என்பதில் மக்கள் உறுதியாகவுள்ளனர். 18ஆவது திருத்தச் சட்டத்தில் ஜனநாயம் குழிதோண்டி புதைக்கப்பட்டட்டது. தற்போது மீண்டும் 20ஆவது திரு த்தச்சட்டத்தில் அதுதான் நடைபெறுகிறது. தனிப்பட்ட சுய லாபம் மனசாட்சியை தாண்டியுள்ளதால் 20ஆவது திருத்தம் கொண்டுவரப்படுகிறது" என்றார்.

## வைத்தியசாலையில் இருந்து தப்பியவர் கைது

கொரோனா வைரஸ் (கொவிட் 19) தொற்றால் பாதிக்கப்பட்டார் என்ற நிலையில் கொஸ்கம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அங்கிருந்து தப்பி சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

26 வயதான குறித்த இளைஞன் பொரள்ள பகுதியில் அமைந்துள்ள சகஸ்புர தொடர்மாடி வீட்டுத் தொகுதியில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ் மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

# வித்தியாரம்பம் செய்வதற்கு எதிர்வரும் 26ஆம் திகதியே சிறந்தநாள்

வித்தியாரம்பம் செய்வதற்கு (ஏடு தொடக்குதல்) எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமையே சிறந்ததென சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஐயப்பதாச குருக்கள் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், 'தசமியில் வித்யாரம்பம் செய்வது குழந்தைகளுக்கு நல்ல ஞானத்தைக் கொடுக்கவல்லது.

நாளை மறுதினம் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணி 16 நிமிடம் வரை நவமி திதி நிற்பதனால். நவமியில் வித்தியாரம்பம் செய்யக்கூடாது.

எனவே, 26ஆம் திகதி திங்கட்கிழமை தசமியிலேயே வித்யாரம்பம் செய்யவேண்டும்.

அட்டமி மற்றும் நவமி திதியில் அறிவுபூர்வமாக சிந்திப்பவர்கள் சுப காரியங்கள் எதையுமே ஆரம்பிக்க மாட்டார்கள்.

எனவே 26.10.2020. திங்கள் காலை 9.மணி 3 நிமிடத்திற்க்கு மேல். 10.மணி 15.நிமிடத்திற்குள். குழந்தைகளுக்கு வித்யாரம்பம் எனும் ஏடு தொடக்கல் வெற்றியைத்தரும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கபில் தேவுக்கு மாரடைப்பு



1983ஆம் ஆண்டு உலக கிண்ணத்தை வெற்றியீட்டிய இந்திய கிரிக்கட் அணியின் முன்னாள் தலைவர் கபில் தேவ் மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அவருக்கு உடனடியாக சத்திரசிகிச்சை செய்யப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ஒரே நாளில்...

பேருவலை மீன்பிடி துறைமுகத்தை சேர்ந்த 20 பேருக்கும் மற்றும் அவர்களுடன் தொடர்புபட்டவர்கள் 20 பேருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக, இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும், தனிமைப்படுத்தப்பட்டிருந்த 48 பேருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## யாழில்...

யாழ்ப்பாணம் பலாலி மற்றும் விடத்தற்பளை தனிமைப்படுத்தல் நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களில் மூவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மினுவாங்கொட கொத்தணியில் கொரோனா தொற்று உறுதியானவர்களுடன் நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்த நிலையில் அடையாளம் காணப்பட்டவர்களிலேயே மூவருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதற்கமைவாக பலாலி தனிமைப்படுத்தலில் உள்ளவர்களில் ஒருவருக்கும், விடத்தற்பளை தனிமைப்படுத்தலில் உள்ள இருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், இவர்கள் மருதங்கேணியில் உள்ள கொரோனா சிறப்பு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட இருப்பதாகவும் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆர்.கேதீஸ்வர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வாக்காளர்களாக...

டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே பொ.ஐங்கரநேசன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும், தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வாக்களிப்பது ஒருவரது ஜனநாயகக் கடமை. அது அவருடைய மிகப் பெரும் பலமுங்கூட. இதன் பொருட்டு ஒருவர் தனது பெயரைத் தேர்தல்கள் ஆணையத்தால் ஆண்டு தோறும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் தேருநர் இடாப்பில் இடம் பெறச் செய்வது அவசியமானதாகும்.

ஆனால், இவ்விடயத்தில் போதிய தெளிவின்மை மற்றும் அக்கறையின்மை காரணமாகப் பலரும் அதற்குரிய படிவங்களைப் பூர்த்தி செய்து கையளிக்காது இருந்துவிட்டு, தேர்தல்களின் போது தங்களுக்கு வாக்காளர் அட்டைகள் வரவில்லையென்று அங்கலாய்க்கின்றனர்.

போரினால் ஏற்பட்ட பல்லாயிரக்கணக்கான உயிரிழப்புகள், அதைவிட அதிகமான புலப் பெயர்வுகள், ஒன்று அல்லது இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ள விரும்பாத பெற்றோர்களின் மனப்பாங்கு போன்ற காரணங்களினால் வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் சனத்தொகை பாரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. இதனால் வாக்காளர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது. இந்நிலையில், எஞ்சியுள்ளவர்களில் அநேகர் வாக்காளர்களாகப் பதிவதற்குக் கரிசனை காட்டாதிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

இலங்கையில் தற்போதுள்ள விகிதாசாரத் தேர்தல் முறையில் வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலேயே மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப் படுவதால், வாக்காளர்களின் எண்ணிக்கையில் ஏற்படும் சரிவு மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கையையும் குறையச் செய்துவிடும்.

உதாரணத்துக்கு, வடக்கு, கிழக்கில் அதிக ஆசனங்கள் கொண்ட யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்டம் 2010ஆம் ஆண்டு 9 ஆசனங்கள் என்ற நிலையில் இருந்து, 2015ஆம் ஆண்டு 7 ஆசனங்கள் என்றாகியுள்ளது. இனிவரும் தேர்தல்களில் மேலும் 2 ஆசனங்கள் குறைவடைந்து 5 ஆசனங்கள் ஆகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. அத்தோடு, வாக்காளர்களின் எண்ணிக்கை குறைவடைவதால் இம்மாவட்டங்களில் இருந்து பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையும் குறைந்து செல்கிறது.

இலங்கையில் வாக்காளர் தினம் ஆண்டு தோறும் கொண்டாடப்படுகின்ற யூன் 1ஆம் திகதியன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருக்கக்கூடிய இலங்கைக் குடிமகனாக உள்ள எவரும் வாக்காளராகும் தகுதி பெற்றவர் ஆவார்.

வெளிநாடுகளுக்குப் புலம் பெயர்ந்து சென்று அங்கு பிரஜாவுரிமை பெறாது இலங்கைக் கடவுச்சீட்டை தற்போது கொண்டுள்ள எவரும், இரட்டைப் பிரஜாவுரிமை பெற்றிருக்கும் எவரும் தேருநர் இடாப்பில் தங்கள் பெயர்களைப் பதிவு செய்ய முடியும்.

இவர்களில் இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் கிராம சேவையாளர்களுடன் அல்லது பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு இக்காலக்கெடுவுக்குள் தங்களது பதிவுகளை மேற்கொள்ளுவது அவசியமானதாகும். வாக்காளர் பதிவை ஊக்குவிப்பது அதிகாரிகளினது மாத்திரமல்ல அரசியல்வாதிகளினது பொறுப்பும் ஆகும். இவ்விடயத்தை ஒரு தேசியப் பணியாகக் கருதி அனைத்துத் தரப்பும் இதில் அக்கறை கொள்ள வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். மாநாகரசபை...

உத்தரவிட்ட மாவட்ட நீதிமன்றம் அன்றுவரை இடைக்காலத் தடைக் கட்டளை வலுவில் இருக்கும் என அறிவித்தது.

அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சார்பில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குத் தெரிவாகிய மகேந்திரம் மயூரன், தமது பங்காளிக் கட்சியான தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் இருந்து நீக்கப்பட்டதால் மாநகர சபை உறுப்பினர் பதவியில் இருந்து நீக்குமாறு அந்தக் கட்சி யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரிடம் கேட்டுக்கொண்டது.

அதன் அடிப்படையில் மகேந்திரன் மயூரனின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் பதவி வறிதாகியதாக யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகரால் அவருக்கு அறிவிக்கப்பட்டது.

தனது உறுப்புரிமை நீக்கத்தை சவாலுக்குட்படுத்தி யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில் மகேந்திரன் மயூரன் நீதிப்பேராணை மனுவை சட்டத்தரணி விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஊடாகத் தாக்கல் செய்தார்.

மனுவின் பிரதிவாதிகளாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ/ின் தலைவர் ஆனந்தராசா, பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், யாழ்ப்பாணம் தெரிவத்தாட்சி அலுவலகர் உள்ளிட்ட 4 தரப்பினரை மனுதாரர் குறிப்பிட்டிருந்தார்.

தனது பதவி நீக்கத்தை சட்ட வலுவற்றதாக உத்தரவிடுமாறு கோரிய மனுதாரர், அதன் மீதான விசாரணை நிறைவடைந்து இறுதிக் கட்டளை வரும் வரை இடைக்காலத் தடைக் கட்டளையை வழங்குமாறும் கோரியிருந்தார்.

இந்த மனு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி வி.இராமக்கமலன் முன்னிலையில் இன்று அழைக்கப்பட்டது.

மனுதாரரின் விண்ணப்பம் முகத்தோற்றளவில் மன்றுக்கு திருப்திப்படுத்துவதால் இடைக்காலத் தடையை வழங்கி மாவட்ட நீதிமன்றம் கட்டளையிட்டது.

அத்தோடு மனுவை பரிசீலனைக்கு எடுக்க பிரதிவாதிகளுக்கு அறிவித்தல் வழங்க உத்தரவிட்டது.

## மட்டு மேய்ச்சல்...

இதில் மயிலத்தணமடு, மாதவணை மேய்ச்சல் தரை பிரச்சினை தொடர்பாகவும் கலந்துரையாடபட்டது.

இந்த கூட்டத்திற்கு மட்டக்களப்பை சேர்ந்த இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், பா.உறுப்பினர்களான கருணாகரன், சாணக்கியன், சார்ல்ஸ் நிர்மலநாதன், கஜேந்திரகுமார், சுமந்திரன் ஆகியோரும் மகாவலி, நீர்ப்பாசன, விவசாய திணைக்கள அதிகாரிகளும் உட்பட தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி சார்பாக மங்களேஸ்வரி சங்கர், கட்சியின் பொதுச்செயலாலர் பிரசாந்தன் அவர்களும் பங்கேற்றிருந்தனர்.

முதல் கட்டமாக உடனடியாக மேய்ச்சல் தரை காணிகளை சோளம் பயிர் செய்கைக்கு வழங்குவதை தடுத்து நிறுத்தி குறித்த விடயம் சம்பந்தமாக ஆராய்வதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இப்பிரச்சனைகளை ஆராய்வதற்கான குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களான கருணாகரன் மற்றும் சாணக்கியன் உட்பட தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாலர் பிரசாந்தன் மற்றும் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரின் செயலாளர் மங்களேஸ்வரி சங்கர் அடங்கலாக அதிகாரிகள், பண்ணையார்கள், சிவில் சமூக பிரதிநிதி என பலரையும் உள்ளீர்த்து அமைக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினர் நவம்பர் 2 ஆம் திகதி குறித்த பிரதேசத்திற்கு களவிஜயத்தினை மேற்கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.இதன் போது மட்டக்களப்பு மற்றும் அம்பாறை அரசாங்க அதிபர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## பேருந்தை...

பேருந்தில் பயணித்த ஏனையவர்கள் தொடர்பிலான தரவுகளைத் திரட்டும் நடவடிக்கையும் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரியவருகிறது.

கம்பஹா மாவட்டம் முழுமையான ஊரடங்கு நடைமுறையில் உள்ளமையால் அந்த மாவட்டத்திலிருந்து மக்கள் வெளியேறுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டுவரும் சூழலில் அவர்கள் ஆறு பேரும் கம்பஹா மாவட்டம் சீதுவை பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வந்ததாக சொல்லப்படுவதால் சுகாதார மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் கூடிய அக்கறை கொண்டு செயற்படுவதாகவும் தெரியவருகிறது.

## கொழும்பில் கொரோனா...

நிலையத்துடன் தொடர்புடையவர்களாவர்.

பெலியகொட மீன் விற்பனை மத்திய நிலையத்துடன் இணைந்தாக கொழும்பில் பதிவான தொற்றாளர்கள் சம்பந்தமான விபரம்...

கொழும்பு - 79
கடுவெல - 06
தெமட்டகொட் - 15
மொறட்டுவ - 03
கொட்டாஞ்சேனை - 04
வெல்லப்பிட்டியவில் - 09 பேரும் தொற்றுக்குள்ளாகினர்.

இதேவேளை, நேற்று மாத்திரம் கொழும்பு மாவட்டத்தில் பதிவான தொற்றாளர்கள்.

கொழும்பு - 14
கொட்டாஞ்சேனை - 07
முல்லேரியாவ - 04
கிரேண்பாஸ் - 04
புளுமெண்டல் - 01
தெஹிவளை - 01

கம்பஹா மாவட்டத்தில் பதிவான தொற்றாளர்கள்
கம்பஹா - 08
வத்தளை - 02
ராகம - 01
மினுவாங்கொட - 14
திவுலப்பிட்டிய - 05
கட்டுநாயக்க - 10

காலி மாவட்டத்தில் அவுங்கலையில் 8 பேரும், இந்துரவ பகுதியில் ஒருவரும், மாத்தறையில் ஒருவரும், குளியாபிட்டியில் 14 பேரும், அநுராதபுரத்தில் இருவர் தொற்றுக்குள்ளனதாக கொவிட் 19 பரவலை கட்டுப்படுத்தும் தேசிய மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

# இலங்கை அபாயகரமான நிலையில் உள்ளது

நாட்டில் தற்போது மிகவும் அபாயகரமான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள அந்த சங்கத்தின் செயலாளர் ஹரித்த அலுத்கே "தற்போது ஏற்பட்டுள்ள அலை அல்லது கொத்தணி மிகவும் கடுமையானது. நாளாந்தம் நூறு, இருநூறு என நோயார்கள் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றார்கள்.

இந்நிலையில், வைத்தியசாலைக் கட்டமைப்பில் பாரிய நெரிசல் ஏற்படுகின்றது. எனினும் அதிர்ஷ்டவசமாக இன்னும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுகளுக்கு உட்படுத்துவதற்கான தேவை ஏற்படவில்லை.

கொரோனா தொற்றாளருக்கு 24 மணித்தியாலத்திற்குள் இரண்டு பி.சி. ஆர் பரிசோதனைகள் இதுவரை மேற்கொள்ளப்பட்ட நிலையில், இரண்டு பரிசோதனைகளிலும் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டால் அவர்கள் வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்படுவார்கள்.

அத்துடன் வேறு நாட்களைவிட தற்போதைய சூழ்நிலையில் மிகவும் ஆபத்தான ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளது. சமூகத்துக்கு மத்தியில் தொற்று பரவியுள்ளது என இப்போதைக்கு எமக்குக் கூற முடியாது.




ஆனால் வேறு நாட்களைவிட தற்போது மிகவும் ஒரு ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவிடம் சில தரவுகள் இருக்கின்றன. இராணுவத்திடமும் தரவுகள் இருக்கின்றன. அத்துடன் இன்னும் சில தரப்பினரிடமும் தரவுகள் காணப்படுகின்றன.

குறிப்பாக பி.சி.ஆர் பரிசோதனை தொடர்பான எண்ணிக்கை தொற்று நோய் பிரிவு ஊடாக அன்றி சுகாதார அமைச்சின் ஆரம்ப பராமரிப்புச் சேவையின் பணிப்பாளருக்கே செல்கின்றது. இவையனைத்தும் ஒரு இடத்திற்கு வர வேண்டும்.

தொற்று நோய்ப் பிரிவு தம்மிடம் உள்ள தரவுகளை மாத்திரம் வைத்துத் தீர்மானங்களை மேற்கொள்ள முடியாது. இதனால்தான் நாம் இதற்கான செயற்பாட்டுப் பிரிவொன்றை யோசனையாக முன்வைக்கின்றோம்" என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டை முடக்கும் திட்டமில்லை!



நாட்டின் தற்போதைய சூழ்நிலையில் முழுமையான முடக்க செயற்பாடுகளை அமுல்படுத்துவது தொடர்பில் எந்தவித தீர்மானங்களும் எட்டப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா தடுப்பு தேசிய செயலணியின் தலைவர் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் முடக்க செயற்பாடுகளை அமுல்படுத்தல் மற்றும் வார இறுதி நாட்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தினை அமுல்படுத்தல் போன்ற எந்த தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா தொற்று ஏற்பட்டுள்ள பகுதிகளில் மாத்திரமே தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தினை அமுல்படுத்துமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் தெளிவுபடுத்தல்களை வழங்கியுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே பொதுமக்கள் தேவையற்ற விதத்தில் வர்த்தக நிலையங்களுக்கு சென்று அதிகளவான பொருட் கொள்வனவில் ஈடுபடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறும் அவர் பொதுமக்களிடம் கோரியுள்ளார்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் மீண்டும் தொற்றாளர்கள் அதிகரிக்கக்கூடிய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் 2 பேர் கைது

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், தலை மன்னார் கிராம பகுதியில் 14 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா பொதிகளை நேற்று (22) மீட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் தலை மன்னார் பொலிஸ் பிரிவில் உள்ள தலைமன்னார் கிராமம் பகுதியில் 14 கிலோ 170 கிராம் கேரள கஞ்சா பொதிகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ள வீரசிங்க வின் பணிப்பில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராட்சி, மன்னார் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சி.பி. ஐயதிலக ஆகியோரின் வழிகாட்டலில் மன்னார் ஊழல் தடுப்பு பிரிவு உப பொலிஸ் பரிசோதகர் வீரசிங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் விரைந்து செயல் பட்டு குறித்த கேரள கஞ்சா பொதிகளை மீட்டனர்.



இதன் போது குறித்த கேரள கஞ்சா பொதிகளை தம்வசம் வைத்திருந்த மற்றும் விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டில் தலை மன்னார் கிராமம் சிலுவை நகரைச் சேர்ந்த 21 மற்றும் 49 வயதுடைய 2 சந்தேக நபர்களையும் கைது செய்து செய்துள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஊரடங்கு அமுலில் உள்ள பகுதிகளில் மருந்துகள் வீடுகளுக்கு



ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள பகுதிகளில் மருந்து பொருட்களை ஒன் லைன் விநியோகிக்க மீண்டும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு அரசாங்க தகவல் திணைக்கள பணிப்பாளர் நாலககளுவெள இதனை தெரிவித்துள்ளார்.

அதற்கு அமைய மீண்டும் அந்த நடவடிக்கையை ஒசுசல மூலம் முன்னெடுப்பதற்கான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக பதில் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் டொக்டர் எஸ். ஸ்ரீதரன் தெரிவித்துள்ளார்.

# அரசியலமைப்பு என்பது கல்வெட்டு அல்ல

அரசியலமைப்பு என்பது கல்வெட்டு அல்ல, காலவோட்டத்துக்கேற்ப சமூகத்தின் வளர்ச்சிக்கேற்ப அது மாற்றியமைக்கப்படவேண்டும் என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், "அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தின் பிரகாரம் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழுவிலுள்ள உறுப்பினர் ஒருவர் பக்கச்சார்பான முறையில் செயற்பட்டார். அவரிடம் சுயாதீனம் இருக்கவில்லை.

தேர்தலை நடத்தவேண்டிய இடத்தில் இருந்துக்கொண்டு தேர்தலுக்கு எதிராக நீதிமன்றம் சென்றார். இவ்வாறு 19 இல் பல குறைப்பாடுகள் உள்ளன.



அச்சட்டம் மக்களின் நம்பிக்கையை இழந்துவிட்டது.

ஜே.ஆர். ஜயவர்தன ஆட்சிகாலத்தில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்பு இந்த நாட்டில் 42 வருடங்களாக அமுலில் உள்ளது. அரசியலமைப்பு என்பது கல்வெட்டு அல்ல, காலவோட்டத்துக்கேற்ப சமூகத்தின் வளர்ச்சிக்கேற்ப அது மாற்றியமைக்கப்படவேண்டும்.

அந்தவகையில் புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்கான சட்டமூலத்தை தயாரிப்பதற்காக 9 பேரடங்கிய நிபுணர் குழுவை அமைத்துள்ளோம். அக்குழுவின் பணிகள் ஆரம்பமாகியுள்ளன. 6 மாதங்களுக்குள் வரைவு நகலை வழங்குவதாக குழுவின் தலைவர் அறிவித்துள்ளார்.

எனவே, 20 என்பது தற்காலிக ஏற்பாடு, அதனை ஒத்திவைக்கமுடியாது. அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கான ஆரம்பமாகக்கூட எடுத்துக்கொள்ளலாம். முழுமையானதொரு அரசியலமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கொரோனா பரவலை சாதாரணமாகக் கடந்துசெல்ல முடியாது

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா பரவலை சாதாரணமாகக் கடந்துசெல்ல முடியாதென அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நாளொன்றுக்கு பத்தாயிரம் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனவும் அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், அனைவரும் கொரோனா தொற்றுக்கு எதிரான சுகாதார பழக்கங்களை கடைப்பிடிப்பதுடன் ஆரோக்கியம் குறித்து கவனம் செலுத்த வேண்டும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

# சுவிஸ் தூதரக ஊழியருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல்!

சுவிஸ் தூதரக ஊழியர் கார்னியா பெனிஸ்டர் பிரான்சிஸூக்கு எதிராக சட்டமா அதிபரினால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றப்புலனாய்வு அதிகாரிகளினால் தான் கடத்தப்பட்டதாக, போலியான ஆதாரங்களை உருவாக்கியதாக, அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.